Ira D. Sankey, 1840-1908



பாமாலை 448 ஓ! கிறிஸ்துவென்னும் கன்மலை

1 ஓ! கிறிஸ்துவென்னும் கன்மலை,

புயலிலோர் புகலிடம்!

எத்தீங்கிலும் அக்கன்மலை,

புயலிலோர் புகலிடம்!

பல்லவி

ஓ! சோர்ந்த பரதேசிக்கோர் கன்மலை!

ஓர் கன்மலை! ஓர் கன்மலை!

ஓ! கிறிஸ்து யேசுவாம் நித்ய கன்மலை

புயலிலோர் புகலிடம்!

2 பகல், நிழல், ராக்காவலாம்;

புயலிலோர் புகலிடம்!

பகைவர் பயமில்லையாம்

புயலிலோர் புகலிடம்!

3 சீறியே புயல் மோதினும்

புயலிலோர் புகலிடம்!

விடோம் தஞ்சம் ஓர் போதிலும்,

புயலிலோர் புகலிடம்!

4 திவ்ய நேசக் கன்மலையே,

புயலிலோர் புகலிடம்!

துணை நில்லும் சகாயரே,

புயலிலோர் புகலிடம்!